Y.MSA

## தந்தை செல்வாவின் தூபிக்கு இருவர் மலர் அஞ்சலி

கோட்டைக்கு அருகில் உள்ள தந்தை செல்வா நினைவாலயத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இப்பகுதியில் புதர்கள் நிறைந்திருந்ததால் நினைவுத் தூபிக்கு அருகில் போகமுடியவில்லை. இதனால் தூபிக்குச் செல்லும் வழியிலேயே மலர் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. ஆர். சதாசிவம், திரு. சா. ஆ. தருமரத்தினம் ஆகிய — 04 ஆம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணெய் லொறிகள் அதிகாரிகளை ஏமாற்றுகின்றன

தென்பகுதியில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்காக 76 லொறிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட போதும் இதுவரை ஆறு லொறிகளில் மட்டுமே மண்ணெண்ணெய் குடாநாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக யாழ் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது; ஏனையோர் இதனை இம்மாவட்டத்திற்கு வெளியே — 04 ஆம் பக்கம் பார்க்க

## 1994-ல் இலங்கையில் பலருக்கு எயிட்ஸ் நோய் பரவும் ஆபத்து

இலங்கையில் அறுநூறு பேரில் எயிட்ஸ் நோய்க் கிருமிகள் உள்ளதாகவும் அதில் முப்பத்திரண்டு பேருக்கு இந்த நோய் பீடித்துள்ளதாகவும் 'எயிட்ஸ் தடுப்பு இயக்குநர்' டாக்டர் காமினி ஜயகுரு தெரிவித்துள்ளார். 1994 இல் இலங்கைக்கு இதனால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். பாலியல் தொடர்புகளாலேயே இந்த நோய் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 127    பிரமோதூத பங்குனி 20    ( 03-04-1991 )    புதன்

## முத்தமிழ் விழா புங்குடுதீவும் தயாராகிறது

புங்குடுதீவு பகுதியில் எதிர்வரும் 8ம், 9ம் திகதிகளில் புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் முத்தமிழ் விழா நடைபெறவுள்ளது.

இவ்விழா நடாத்துவதற்காக அம்மைதானத்தில் புதியதொரு அரங்கும் அமைக்கப்பட்டு பூர்த்தி அடைந்துள்ளது மேற்படி நடைபெறவிருக்கி — 04 ஆம் பக்கம் பார்க்க

## 23 இராணுவ சடலங்கள் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

மன்னார் வேப்பங்குள மோதலில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரது 23 சடலங்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. நேற்றுக் காலை 11-30 மணியளவில் யாழ் நகரில் வைத்து சடலங்கள் ஒப்படைக்கப்பட்டது. சடலங்கள் ஒப்படைப்புப் பத்திரத்தில் விடுதலைப்புலிகள் பிரதிநிதி ஒருவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரதிநிதியும் கையெழுத்திட்டனர். யாழ் செஞ்சிலுவைச் சங்க லொறியும். யாழ். போதனா வைத்திய சாலை வாகனம் ஒன்றும் இச் சடலங் ...04 ஆம் பக்கம் பார்க்க

# மட்டுநகரில் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள்

### சமாளிக்க முடியாத நிலையில் பொலீஸார்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது வேப்ப வெட்டுவானுக்கும், இலுப்பையடிச் சேனைக்கும் இடையே விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதம் தெரியவில்லை. புலிகள் தரப்பில் அமலன் (மகாதேவன் ராஜேஷ் - குருக்கள் மடம் மட்டக்களப்பு), குகநாதன் (இ. ரணசிங்கம்- காரைதீவு அம்பாறை) ஆகியோர் வீர மரணத்தை தழுவிக்கொண்டனர்.

இதேவேளை மட்டு நகரிலிருந்து சென்ற பொலிஸார் மீது இருதயபுரத்தில் வைத்து புலிகள் தாக்குதல் நடாத்தியதில் ஒரு பொலிஸ்காரர் கொலைப்பட்டார். இவரிடமிருந்து 84-எஸ் ரகதுப்பாக்கி -1, மகசின்-1, ரவைகள்-30 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சில நாட்களின் முன்னர் மட்டுநகரினுள் புகுந்த விடுதலைப் புலிகளின் அணி யொன்று நகரின் மின்சார விநியோகத்தை துண்டித்துவிட்டு நகரில் உள்ள பொலிஸ் நிலையம் பொலிஸ் விடுதி ஆகியவற்றின் மீது தாக்குதல் நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் சில பொலிஸார் காயமடைந்தமை தெரிந்ததே. (71)

## பூவரசம் குளத்தில் விமானக்குண்டு வீச்சு

நேற்று முன்தினம் காலை வவுனியா மாவட்டம் பூவரசம் குளம்பகுதியில் இரு பொம்மர்கள் தாக்குதல் நடாத்தியதில் இரு பொதுமக்கள் பலியாகினர்.

இதேவேளை பாலத்குளம் முகாம் இராணுவத்தினர் ஆறுமைல் தொலைவிலுள்ள — 04 ஆம் பக்கம் பார்க்க

## தாண்டிக்குளம் முகாம்

## கொழும்பு சென்ற பயணிகள் நொச்சிமோட்டையில் அவலம்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணம் செய்த 700க்கும் மேற்பட்ட பயணிகள் நொச்சிமோட்டைப் பகுதிகளில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு தேவையான உணவு மற்றும்நீர்வசதி அங்கு தட்டுப்பாடாக இருப்பதுடன் சுகாதார வசதியும் குறைவாக இருக்கிறது.

இவ்வாறு நொச்சிமோட்டைப்பகுதியில் தங்கியுள்ளவர்கள் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் கொழும்பு செல்லச் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## வீர மரணம்

நேற்று முன்தினம் மாலை காரைநகர் முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் பொங்கோ (கணபதி ஸ்ரீரஞ்சன் யாழ்) சேது (வீரசிங்கம் கிருபாகரன் வேலணை) நிதி ஆகிய மூவரும் வீரமரணம் அடைந்தனர். 71

## மடங்களை தகர்த்து கீரிமலையில் காவலரண்

கீரிமலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அங்கு இருந்த மடங்களைத் தகர்த்துள்ளதாகவும், குடிசை வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தகர்க்கப்பட்ட கற்களைக் கொண்டு பாதுகாப்பான காவலரண்கள் அமைத்து வருவதாகவும் தெரியவருகிறது.

## மனைவி தற்கொலை

வவுனியா இராணுவ முகாமில் பணிபுரிந்தவர் கடந்த எட்டு மாதகாலமாக வீடு — 04 ஆம் பக்கம் பார்க்க

## ஒருவருக்கு 7லட்சம் ரூபா:த

## அவுஸ்திரேலியாவில் பயிற்சி பதினேழு பேரிடம் மோசடி

அவுஸ்திரேலியாவில் விமானப் பயிற்சிபெற ஆட்களைத் தெரிவு செய்வதாகக் கூறி லட்சக்கணக்கான ரூபா மோசடி செய்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

பதினேழு பேரிடம் ஏழு லட்சம் ரூபா வீதம் பணம் பெற்ற இந்த நபரை ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வைத்து பொலிஸார் கைது

இவர் இதற்கு விண்ணப்பம் கோரியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

## பெயர்ப் பலகை நாசம்

கிளிநொச்சியில் ஒன்பதாம் பெயர்ப் பலகை சில விஷமிகளால் வீழ்த்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து இயங் — 04 ஆம் பக்கம் பார்க்க

## ஹோட்டல்களில் சோதனை மதுபானங்களில் கலப்படம்

மதுபானங்களில் கலப்படம் செய்து விற்பனை செய்து

பிரதிப்பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பல தலை

[illegible] ன் தாக்குதல் நடாத்தியதில் முகாம் இராணுவத்தினரி ருமைல் தொலைவிலுள்ள

## தாண்டிக்குளம் முகாம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# காவலரண் இராணுவத்தினர் பண்ணை பாடசாலை சென்றனர்

வவுனியாவில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த நான்கு நாள்களாக கடும் சமர் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமில்நிலை கொண்டிருந்த இராணுவத்தினரின் சில காவலரண்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் வவுனியா பண்ணைப் பாடசாலைக்கு பின்வாங்கிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப-11)

## சந்திரிகா சொல்கிறார்

# ஆயுதப்படையினாலும் இந்த அரசினாலும் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைகிறது

பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் இந்த அரசினாலும் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த நாம் கூட்டுச் சேர்ந்துள்ளோம்.

இவ்வாறு நுவரெலியாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவி திருமதி சந்திரிகா விஜயகுமார ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்துள்ளோம் என்றால் முழுக்க முழுக்க அவர்களின் கொள்கையை நாம் ஏற்றுள்ளதாக

— 04 ஆம் பக்கம் பார்க்க

# பேர்னாட் தலைமை தூதுக்குழு புதுடில்லி செல்லுகிறது

விரைவில் நடைபெறவுள்ள இலங்கை - இந்திய கூட்டு கமிட்டியின் கட்டம் தொடர்பாக ஆராயும் முகமாக இலங்கைத் தூதுக்குழு வொன்று புதுடில்லி செல்லுகிறது.

வெளியுறவு அமைச்சின் செயலர் பேர்னாட் திலகரட்ன தலைமையிலான இக்குழு எதிர்வரும் 7ம் திகதி முதல் 11ம் திகதி வரை டில்லி

— 04 ஆம் பக்கம் பார்க்க

[illegible] நட்சத்திர ஹோட்டல் ஏழு லட்சம் ரூபா வீதம் பணம் பெற்ற இந்த நபரை ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை மூலமாக

# குடிவரவு திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடிதம்

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் வடபகுதி மக்களுக்கு தனிச் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

கொழும்பில் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் சிலருக்கு பிறப்புச்சான்றிதழ் உண்மைப்பிரதியை சமர்ப்பிக்குமாறு அனுப்பப்பட்ட கடிதங்களே இவ்வாறு சிங்களத்தில் உள்ளன.

இதனால் இக்கடிதங்களின் மொழிபெயர்ப்புக்காக இவர்கள் சிங்களம் தெரிந்தவர்களைத் தேடி அலைகின்றனர்.

(66)

# மதுபானங்களில் கலப்படம்

மதுபானங்களில் கலப்படம் செய்து விற்பனை செய்து வந்த பத்து பிரபல ஹோட்டல்களையும், இனப்புகளையும் பொலிஸார் திடீர்சோதனை நடாத்திக் கண்டுபிடித்தனர்.

பிரதிப்பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பல தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இவற்றைக் கண்டுபிடித்தது.

இக்குடிவகைகளில் அதிக போல் கலந்து விற்பதாக பொதுமக்கள் தெரிவித்த புகார்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழோசையில் நேரமாற்றம்

லண்டன் தமிழோசையின் ஒலிபரப்பு நேரங்களில் ஏப்ரல் முதலாம் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# காரைநகரில் நேற்று இரவு விமானக் குண்டு வீச்சு!

நேற்று மாலை 6 மணியளவில் இருந்து காரைநகரில் மும்முனைத்தாக்குதல் இடம் பெற்றவண்ணம் உள்ளது.

கடற்பரப்பில் இருந்து பீரங்கித்தாக்குதல்களும், ஹெலியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல்களை நடாத்தின.

இதேசமயம் கடற்படை முகாமிலிருந்தும் குடிமனைப் பகுதிகளை நோக்கி ஷெல், கனிவர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பலாலி முகாமிலிருந்தும் ஷெல் வீச்சு நேற்று அதிகாலை காரைநகர் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்டது இவை பொன்னாலைப் பகுதியில் விழுந்து வெடித்தன. (ப31)

# பாடசாலைகள் 5ஆம் திகதி முதல் மூடப்படும்

## உயர்தர விசேடபரீட்சை குறுகியகாலத்தில் நடாத்தி முடிக்கப்படும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர விசேடபரீட்சை திட்டமிட்டவாறு இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் யாழ் மாவட்டத்தில் பூர்த்தியாக்கப் பட்டுள்ளன. பரீட்சை வினாத்தாள்கள் தவிர்ந்த ஏனைய பரீட்சை உபகரணங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்திற்கு ஏற்னவே எடுத்துவரப்பட்டு விட்டன.

க பொ த உயர்தர விசேட பரீட்சைக்கான நேரசூசியையும் ஏற்னவே தயாரிக்கப் பட்டுவிட்டது. குறுகிய காலத்தினுள் சகல துறைப்பரீட்சைகளையும் நடத்தி முடிக்கக் கூடியவாறுநேரசூசிகை தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ் மாவட்டப்பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக நாளை மறு தினம் 5 ஆம் திகதி மூடப்படவுள்ளன.

(ப-11, 70)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### மாணவர் மன்றம் மறுக்கிறது

12 3 91 அன்று வந்த பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றிய பத்திரிகைச் செய்தியின்படி 1 3 91 அன்று நடந்த பேரணியின் பின்னர் ஒரு சில மாணவர்கள் அப்படிப் பட்ட சம்பவங்களில் ஈடுபட்டிருப்பின் அதற்காக மனம் வருந்துகின்றோம். ஆனால் ஒரு சில மாணவர்களே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம், அத்துடன் கடிதத்தில் குறிப்பிட்டவாறு (வக்கிரமான துன்புறுத்தல்) மோசமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதையும் அறியத் தருகிறோம் அச்சம்பவத்தைப் பிழையான நோக்கில் பார்த்து முழுப் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் ஒட்டு மொத்தமாகப் பழி சுமத்துவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஸ்ரீ லங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைகள் எமது மண்ணில் முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் எண்ணற்ற உயிர்த் தியாகங்களின் மத்தியில் தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டம் பரிணாமம் அடைந்து வருகின்றது இவ் வேளையில் யாழ்பல்கலைக் கழகத்தைப் பற்றித் தங்கள் பத்திரிகையில் வந்த கடிதத்தை இட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைகிறோம்.

எமது பல்கலைக் கழகமானது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால கட்டத்திலிருந்தே தனது பங்களிப்பினைச் செய்து வந்திருக்கிறது. ஊர்வலங்கள் நடத்தியது மட்டுமன்றி வேறுபல வழிகளிலும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பங்களிப்பினைச் செய்து வந்திருக்கின்றனர். எனவே ஒரு சிலரின் செயல்களை வைத்து ஒட்டுமொத்தமாகப் பல்கலைக்கழக மாணவர் மீது பழி சுமத்துவது தவறானதாகும்.

1984 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் இலங்கை அரசின் இன அழிப்பு நோக்கத்தை உலகிற்கு அம்பலப்படுத்தியவர்கள் நாம். 1987இல் இந்திய வல்லாதிக்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்து, ஜனநாயக உரிமைகள் ஆதிக்க சக்திகளினாலும், அதன் கைக்கூலிகளினாலும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, 'போராட்ட சக்திகளை முறியடித்து விட்டோம்' என இந்திய அரசு மார்தட்டிக் கொண்டிருந்தது. அவ்வேளையில் எந்த ஒரு வெகுஜன அமைப்பும் வீதியில் இறங்கி ஜனநாயக ரீதியில் சாத்விகப் போராட்டங்களில் ஈடுபடாத நிலையில் இருந்தபோது எமது உரிமையை நிலைநாட்ட வீதிகளில் இறங்கியே ஆக வேண்டும் என்ற நோக்குடன் 88 - 89 களில் பலாத்கார ஆட்பிடிப்புக்கு எதிராகவும், இராணுவ அடக்குமுறைக்கு எதிராகவும், மாணவர்கள் கைது தொடர்பாகவும் பகிரங்க ஊர்வலங்களை நடத்தினோம். ''இன்னும் எங்கள் ஆன்மா சாகவில்லை. விழிப்புடனேயே இருக்கிறோம் என்பதை உணர்த்தினோம். வீதி மறிப்புப் போராட்டத்தில் எமது வளாகம் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வர்களான ஜெகநாதன், சத்தியேந்திரா எனும் இரு மாணவர்களைக் களத்தில் பலி கொடுத்தோம். எமது மண்ணில் நாளாந்தம் நடக்கும் இனப்படுகொலைகளைக் கண்டு கண்ணீர் சிந்துகிறோம். கண்டிக்கிறோம். மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொள்கிறோம்.

- செயலாளர்

யாழ் பல்கலைக்கழக மாணவர் மன்றம்

குறிப்பு:-

தயவு செய்து கொஞ்சம் அவதானியுங்கள்:

★ ஒரு சில மாணவர்கள் ஈடுபட்டிருப்பின்...

★ ஒரு சில மாணவர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம்.

★ கடிதத்தில் குறிப்பிட்டவாறு (வக்கிரமான துன்புறுத்தல்) மோசமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. (அப்படியாயின் எப்படியான சம்பவங்கள் இடம்பெற்றன?)

## அக்கினி யாகம் தினமும் செய்தால் அசுத்தக் கிருமிகள் அகலுமாம்

''அக்கினி யாகம்' செய்வதன் மூலம் உடலுக்கும், உள்ளத்துக்கும் ஆரோக்கியம் கிடைப்பதோடு, பல நோய்களும் நீங்கி விடுகின்றன. ஏன் புற்றுநோய் கூட நீங்கும் வாய்ப்புள்ளது இந்த அக்கினி யாகம் எந்த மதச் சார்பும் அற்ற ஒரு மருத்துவ முறையாகும்'' என மகாராஷ்டிராவைச் சேர்ந்த பேராசிரியர் கணபதி முல்லே தெரிவித்துள்ளார். இவர் தற்பொழுது கொழும்பு வந்துள்ளார்.

தினந்தோறும் சூரியன் உதிக்கும் வேளையிலும், அஸ்தமிக்கும் வேளையிலும் வீட்டின் ஒரு இடத்தில் சிறியதாகவே இதனைச் செய்யலாம். இந்த யாகத்தின் போது ஏற்படும் புகை வீட்டுக்குள் பரவும் போது அசுத்தக் கிருமிகள் அழிகின்றன ஆரோக்கியமான பிராணவாயு பரவுகின்றது. இதனால் நோய் நீங்குகின்றது.

இதனைச் செய்வதும் இலகுவானதாகும். பிரமிட் அமைப்புள்ள செம்பினால் ஆன கிண்ணம் ஒன்றை எடுத்து அதில் பசுச் சாண வரட்டித் துண்டை இட்டு சிறிது அரிசி, நெய் ஆகியவற்றை இட்டுத் தீ மூட்ட வேண்டும். இதன் மூலம் வரும் புகை 18 கி. மீற்றர் தூரம் வான் நோக்கிக் கிளம்பும். இதனால் அசுத்தங்கள், கிருமிகள் அழிக்கப்பட்டு, நோய்கள் நீங்குகின்றன என்றார்.

(ப-10)

## சுகாதார கருத்தரங்கு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தேநீர்க் கடை உரிமையாளர்கள் தமது கடைகளில் உணவுப் பொருட்களை சுத்தமாக வைத்து விற்பனை செய்தல் வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி க. தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஒரு கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை சுகாதார வைத்திய அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(ப. 17)

## உங்களுக்கு உரியதா?

குருநகர் ஜோன் முத்தழகு குருநகர் இன்னப்பு இருதயராஜா மற்றும் புங்குடுதீவு கிழக்கு தங்கச்சியம்மா குமாரசுவாமி, வவுனியா கிவசம்பு பாலகிருஷ்ணன் சுதாகர் ஆகியோரது ஆளடையாள அட்டைகள் முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில், ஆசிரிய பீடத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## பரீட்சைக் கட்டணம் அறவிடும் அதிபர்கள் மீது நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் முதலாம் தவணை பரீட்சைக்கென மாணவர்களிடமிருந்து பரீட்சைக்கட்டணம் எதுவும் அறவிடக்கூடாது என யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவை மீறி அதிபர்கள் எவராவது மாணவர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிட்டால் அது பற்றி தனது கவனத்திற்குக் கொண்டுவருமாறும் அவ்வாறான அதிபர்கள் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

## தமிழ் சாகித்திய விழா ஆண்டுதோறும் இடம்பெறும்

தமிழ் சாகித்திய விழா இனி வருடம்தோறும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து வருடங்களாக தமிழ் சாகித்திய விழா தடைப்பட்டிருந்தது.

ஒவ்வொரு வருடமும் சிறந்த படைப்புக்களுக்கு சாகித்திய விருது வழங்கலும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள்வங்கி ஊழியர்கள் சட்டப்படிவேலை' போராட்டத்தில் குதிப்பர்,

மக்கள் வங்கி ஊழியர்கள் இவ்வாரம் முதல் 'சட்டப்படி வேலை' போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

மக்கள் வங்கி ஊழியர்களின் வீட்டுக்கடன் பிரச்சினை, பதவியுயர்வு, இடமாற்றம் போன்ற பல பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருந்து வருகின்றன.

இவற்றை விரைவில் தீர்க்குமாறு நிருவாகத்தை வற்புறுத்தவே இந்த 'சட்டப்படி வேலை' போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

நாடு முழுவதும் 320 மக்கள் வங்கிக் கிளைகள் தற்பொழுது செயற்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வங்கிகளை மக்கள் மயப்படுத்தும்


பலாலி ஆசிரியர் கலாசாலை
திருநெல்வேலி

அமரர்
பேராசிரியர் சோ. கந்தையா
ஞாபகார்த்தப் பேருரை

விடயம் :-
''அங்கிகளின் தலைமுறையுரிமையடையும் நடத்தைக் கோலங்கள்.''

நிகழ்த்துபவர்:-

வில்லை. (அப்படியாயின் எப்படியான சம்பவங்கள் இடம்பெற்றன?)

★ அச்சம்பவத்தைப் பிழையான நோக்கில் பார்த்து... (இங்கு நீங்கள் சுட்டும் அச்சம்பவம்தான் எது? சரியான நோக்கில் பார்ப்பது எப்படி?)

— இவற்றின் சரியான அர்த்தங்கள் என்ன? எவை?

— ஆசிரியர்

---

## 'பழைய வித்தில்லாமல் புதிய அறுவடை இல்லை'

''மகாவம்சம் வரலாறு அல்ல எனக்கூறும் சிங்கள ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அது ஒரு Myth—கட்டுக்கதை ஆனால் இலசமயங்களில் Mythக்கு வலு அதிகம். சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படையெடுத்தானா என்பது தெரியாது. ஆனால் செங்குட்டுவன் கதை திராவிட இயக்கத்துக்கு ஒரு குறியீடு. அதுபோலவே 'குவேனியும்' ஒரு குறியீடு''.

நேற்று முன்தினம் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற 'குவேனி' வெளியீட்டு விழாவில் விமர்சன உரை நிகழ்த்திய பேராசிரியர்கா.சிவத்தம்பி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

''தமிழ்ச்சிறுகதையை வைத்துக்கொண்டு நாம் உலக அரங்கில் நுழையலாம், ஆனால் தமிழ்நாவலுக்கு இன்னும் உலக அரங்கில் நுழையும் தகுதி வரவில்லை'' என்றார் அவர்.

விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ரவி பேசுகையில்' தமிழ்த்தாய் பதிப்பகம் ஒரு சுதந்திரமான அமைப்பு. எமது விடுதலைப் போராட்டம் சமூகத்தின்மீது ஏற்படுத்திய தாக்கத்தைக் கலாபூர்வமாக வெளியிடும் ஆக்கங்களை வரவேற்கிறோம் என்றார்.

(ப-2)

## வங்கிகளை மக்கள் மயப்படுத்தும் திட்டம் எதுவும் இல்லையாம்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரச வங்கிகளை மக்கள் மயப்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லை என அரசு நேற்று மீண்டும் அறிவித்துள்ளது.

இவ்விரு வங்கிகளும் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளதாக ஊழியர்கள் மத்தியில் அச்சம் நிலவுவதையடுத்தே இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## சங்கீதசபை செயன்முறைப்பரீட்சை 16 ஆம் திகதி முதல் நடைபெறும்

வட இலங்கைச் சங்கீதசபையின் சங்கீதம், பண்ணிசை, பரதம், கதகளி, மிருதங்கம் ஆகியவற்றுக்கான செயன்முறைப் பரீட்சைகள் 16 ஆம் திகதி முதல் இரு கட்டமாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் கட்டம் 16 திகதி முதலும், இரண்டாம் கட்டம் 22-ம் திகதியும் நடைபெறும்.

ஆறாம் தர ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கானகருத்தரங்குஇன்று புதன் முதல் யாழ். இந்து மகளிர்கல்லூரியில் இடம்பெறும்' பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரியில் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது

(ப-11)

## பொதுக்கிணறு அசுத்த நிலையில்

மருதங்கேணி பொதுச் சந்தைப் பகுதியில் உணவுச் சாலைகள், தேநீர்க் கடைகள் ஆகியவற்றிற்கு தண்ணீர் பெறுவதற்கு பாவிக்கப்படும் பொதுக் கிணறு அசுத்தமாகவும் உடைந்தநிலையில்காணப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.(43

---


நிகழ்த்துபவர்:-

**பேராசிரியர் K. தேய்வேந்திரராஜா**

தாவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்

காலம் :-04.04.1991, வியாழன் காலை 8.30

இடம் : கலாசாலை சுப்பிரமணிய மண்டபம்

அறிவியல் ஆர்வலரே, வருக!

விஞ்ஞான மன்றம்

04005



**கண்ணீர் அஞ்சலி**

**சரவணமுத்து செல்வராசா**

யாழ் இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவர்களில் ஒருவரும் எமது சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரும் கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வந்தவருமாகிய சரவணமுத்து செல்வராசா அவர்களின் மறைவிற்கு எங்கள் அஞ்சலி. துயரடைந்துள்ள உற்றார் உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

—பழைய மாணவர் சங்கம்

யாழ் இந்துக்கல்லூரி

04003

## ராணுவ நடவடிக்கையால் பாதிப்புற்ற சங்கங்களுக்கு

# நிவாரணம் வழங்கக் கோரிக்கை

இராணுவ நடவடிக்கைகளினால் வடக்கிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள், வாகனங்கள், சொத்துக்கள் போன்றவற்றிற்கும் கடமையிலிருக்கும் போது சங்கப் பணியாளர்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் இழப்புக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை யாழ் அரச அதிபரைக் கோரியுள்ளது.

அத்துடன் கூட்டுறவுச்சங்க உணவு விநியோக வேலைத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் என்ற வகையில் அச்சங்க வாகனங்களுக்குத் தேவையான எரிபொருள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றையும், காகிதாதிகளையும் பெற்றுத்தர நடவடிக்கையெடுக்குமாறும் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை அரச அதிபரைக் கேட்டுள்ளது.

இதுதவிர மேலும் ஏழு கோரிக்கைகளும் யாழ் அரச அதிபரிடம் இச் சபையினால் விடுக்கப்பட்டுள்ளது. (66)

## ஊசியோ, மருந்தோ இன்றி உருவாகும் சோதனைக்குழாய்க் குழந்தை

ஊசியோ, மருந்தோ செலுத்தப்படாமல் சோதனைக் குழாய்க் குழந்தையை உருவாக்கும் முறை சென்னையில் வெற்றி பெற்றுள்ளது.

சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் இத்தகைய குழந்தையொன்று கடந்த 20 ஆம் திகதி பிறந்துள்ளது. இக்குழந்தை தற்போது உடல் நலத்துடன் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இயற்கையாகவே உருவான பெண்ணின் கருமுட்டையைக் கொண்டே இந்தப் புதிய சோதனைக்குழாய் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஊசி, மற்றும் மருந்துகள் செலுத்தப்பட்டே சோதனைக் குழாய்க் குழந்தைகள் உருவாக்கப்பட்டு வந்தன.

இப்புதிய முறையின் மூலம் மிகக் குறைந்தளவு செலவில் சாதாரண பாமர மக்களே குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என சென்னை வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஊரடங்கு அமுல்

வவுனியா நகர், வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு மற்றும் மன்னார் தீவு ஆகியபகுதிகளில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் முதல் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

எனினும் வவுனியா, மன்னார் மாவட்டங்களின் இதர பகுதிகளில் காலவரையற்ற ஊரடங்குச்சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிந்திய செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நண்பகல் முதல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வத்தளையில்தமிழ்ப்பெண்கொலை; பெருமளவு நகைகளும் அபேஸ்!

வத்தளையில் தனிமையில் வாழ்ந்து வந்த தமிழ்ப் பெண்மணி ஒருவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

பானுமதி விஸ்வநாதன் (62) என்ற இந்த செல்வந்தப் பெண்மணியை கொலை செய்தவர்கள் அவரது கார் மற்றும் தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## தமிழர்களுக்கு உணவு வழங்கிய தம்பலகாமம் சங்கங்களுக்கு சீல்வைப்பு

தம்பலகாமம் பகுதியில் சமீபத்திய அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வாரா வாரம் நிவாரணப் பொருள்களை வழங்கி வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் திடீரென இராணுவத்தினரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன.

இதனால் தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் உணவுப் பொருள்களைப் பெறமுடியாது திண்டாடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேர்தல் பிரசார பயணங்களுக்கு அமைச்சர்கள்விமானத்தைபயன்படுத்ததடை

இந்தியாவில் ஆளுங்கட்சி அமைச்சர்கள் தேர்தல் பிரசாரங்களுக்கு விமானங்களையோ, ஹெலிகப்டர்களையோ பயன்படுத்தக்கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான புதிய தேர்தல் நெறியொன்று இந்தியாவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச கடமை சர் மட்டும் பாதுகாப்புக் காரணங்களை கருத்தில் கொண்டு தேர்தல் பிரச்சார பயணங்களுக்குவிமானங்களைப்பயன்படுத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## அலுவலகங்களுக்குபொருட்களை எடுத்துவர கொழும்பில் ஒகே, ஆனால் வவுனியாவிலோ...

(நேற்றைய தொடர்ச்சி)

# தேசபக்தி நேரு குடும்பத்தின் தனிச்சொத்தா?

★ கல்கி: அரசியல் சாசனத்தின் 356 ஆவது பிரிவு சில சமயங்களில் அநியாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் அதை முழுமையாக நீக்குவது சரியானதுதானா?

கலைஞர்: திடீரென்று, எந்த விதமான முகாந்திரமுமில்லாமல் இதுமாதிரி ஓர் ஆட்சியைக் கலைக்கலாம் என்று மத்திய அரசு ஆணவம் கொள்வது தடுக்கப்பட்டாக வேண்டும். அதற்குப் பெரிய அளவில் சிந்தித்து, நல்ல முடிவுக்கு வந்து ஒரு மாற்றுச் செய்துதான் ஆக வேண்டும்.

★ கல்கி: தி.மு.க.வின் எதிர்காலத் திட்டம் என்ன?

கலைஞர்: அண்மையில் வரப்போவது தேர்தல்தான். அதற்கு நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

★ கல்கி: வரப்போகிற தேர்தலில் உங்களை ஒரு தேச விரோதி என்று சித்திரிப்பதில்தான் எதிர்க்கட்சியினர் மிகவும் மும்முரமாக இருப்பார்கள். அதை நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

கலைஞர்: நீங்கள்தான் ரொம்பவும் கவலைப்படுகிறீர்கள். (சிரிக்கிறார்) நீங்களே அதைப் பெரிதாகப் போடுவீர்கள் போல் இருக்கிறதே! (மீண்டும் சிரிக்கிறார்) கல்கி பத்திரிகையே என்னை அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறது. 'நல்லாட்சி நடக்கவில்லை" என்று நீங்களே பலதடவை எழுதியிருக்கிறீர்களே!

★ கல்கி: நாங்கள் உங்களைப் பலமுறை பாராட்டியும் எழுதியிருக்கிறோம்!

கலைஞர்: பாராட்டி எழுதுவதென்பது வேறு. ஒரே வரியில், 'நல்லாட்சி நடக்கவில்லை; நல்லாட்சி இருந்தாலல்லவா நல்ல எதிர்க்கட்சி இருக்கும்' என்று எழுதியிருக்கிறீர்களே!

★ கல்கி: நாங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தனித்தனியாகப் பார்த்து, அது தொடர்பாகத்தான் விமர்சிக்கிறோம். பொதுப்படையாக அல்ல.

கலைஞர்: நான் வருத்தமோ, கோபமோ கொள்ளவில்லை (சிரிக்கிறார்). ஏனெனில், நானும் ஓர் எழுத்தாளன்; பத்திரிகையாளன். என்னால் பதில் சொல்ல முடியும்!

★ கல்கி: தேசிய முன்னணியில் உங்கள் பங்கு இனி என்னவாக இருக்கும்?

கலைஞர்: அது எப்போதும் போல் இருக்கும். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

★ கல்கி: இனி விடுதலைப் புலிகள் விஷயத்தில் உங்கள் சிந்தனையில் ஏதேனும் மாற்றங்கள் உண்டா?

கலைஞர்: எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும் அவர்கள் தமிழகத்தை ஒரு வன்முறைக் களமாக ஆக்கக் கூடாது. அவர்கள் தமிழகப் போலீஸாருக்குச் சவால் விடுவது போன்ற காரியங்களை நான் வன்மையாகக் கண்டித்திருக்கிறேன். அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது.

★ கல்கி: போராளிகளைச் சமாளிப்பதற்காக மத்திய அரசிடம் நீங்கள் பட்டாளம் கேட்டீர்களே என்ன வாயிற்று?

கலைஞர்: கொடுக்கவில்லை, ஆனால் இப்போது கொடுத்திருக்கிறார்கள்! ஆட்சிக் கலைப்பால் ஏற்படக் கூடிய கலவரங்களை ஒடுக்கவாம்!

★ கல்கி: நீங்கள் கேட்டபோது கொடுக்காத

அகதிகள் மீதமிருந்தவர்கள் படகுகளை ஓட்டிக் கொண்டு வந்தவர்கள். அவர்களை விடாமல் என்ன செய்வது?

★ கல்கி: தி.மு.க.வின் எதிர் காலம் எப்படியிருக்குமென்று நினைக்கிறீர்கள்?

கலைஞர்: தி.மு.க.வின் எதிர்காலமென்பது தேர்தல்களை வைத்து நிர்ணயிக்கப்படுவதல்ல. அதனால் அது எப்போதுமே நன்றாகத்தான் இருக்கும்.

★ கல்கி: உங்களது இலக்கியப் பணி—எழுத்துப் பணி எப்படியிருக்கும்?

கலைஞர்: நேரமும் வாய்ப்பும் கிடைக்கிறபோது அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

★ கல்கி: நேரம் கிடைக்கும் என்கிறீர்களா? கிடைக்காது என்றீர்களா?

கலைஞர்: உங்கள் பிரார்த்தனை என்னவென்று எனக்குத் தெரியாதே! (சிரிக்கிறார்)

★ கல்கி: மக்கள் சிந்தித்து வாக்களித்தால் மீண்டும் நீங்கள் வந்துவிடுவீர்கள். புள்ளி விவரம் எடுத்த போது படித்தவர்கள் மத்தியில் தி.மு.க.வுக்கு அதிக ஆதரவும் படிக்காதவர்கள் மத்தியில் அ.தி.மு.க.வுக்கு அதிக ஆதரவும் இருப்பதாகச் செய்தித்தாள்களில் வந்திருக்கின்றன!

கலைஞர்: இதுவே எங்களுக்குப் பெரிய கிரெடிட்தானே!

★ கல்கி: அ.தி.மு.க.—இ.காங்கிரஸ் பாணியிலேயே தி.மு.க.வும் பந்த் நடத்த வேண்டுமா?

கலைஞர்: அவர்கள் நடத்தியது சாலை மறியல். வாகனங்களை மறிப்பது. இது முழு அடைப்புக்கான வேண்டுகோள். இரண்டுக்கும் இடையே வித்தியாசம் நிறைய உண்டு. வாகனங்களை அடித்து, உடைத்து அதன் மூலம் இங்கே சட்டம் — ஒழுங்கு குலைந்து விட்டது என்று காட்ட நினைத்தார்கள். அது தோல்வியடையவே சந்திரசேகரைப் பயன் படுத்திக் கொண்டார்கள். சாலை மறியல் நிலையான ஒரு ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப் பட்ட சதி; அதில் பலாத்கார நோக்கு உண்டு. முழு அடைப்பு நிலையான ஓர் ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கு மக்கள் தாங்களாகவே முன் வந்து காட்டிய எதிர்ப்பு.

★ கல்கி: மத்தியில் தேசியவாதல் இப்போது நிறையக் குறைகள் தோன்ற ஆரம்பித்திருக்கிற சூழ்நிலையில், வரப்போகிற தமிழக சட்டமன்றத் தேர்தலோடு, நாடாளுமன்றத் தேர்தலும் சேர்ந்து வரும் என்று கருதுகிறீர்களா?

கலைஞர்: டெல்லியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று நடப்பதால் எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. பாலிகாவில் தேவிலால் படித்த உரையில் ஆந்திராவிலுள்ள நக்ஸலைட் பிரச்சினையையும், தமிழகத்திலுள்ள விடுதலைப் புலிகள் பிரச்சினையையும் ஆந்திர அரசும், தமிழக அரசும் திறமையாகச் சமாளிக்கும் என்றுதான் அச்சிடப்பட்டிருந்தது. பிறகுதான் அவசர அவசரமாகத் தமிழக அரசு என்பதை அடித்து விட்டு மத்திய அரசு திறமையாகச் சமாளிக்கும் என்று மாற்றப் பட்டிருக்கிறது. ஆக, தி.மு.க. அரசு கலைக்கப்படுகிற விஷயம் தேவிலாலுக்கு முன்பே தெரியாது. தெரிந்திருக்குமானால் அவர் இதை விரும்பியிருக்க மாட்டார் என்பதால் தான் துணைப் பிரதமருக்குத் தெரிவிக்காமலே செய்திருக்கிறார்களென்று நினைக்கிறேன்.

★ கல்கி: சட்டமன்றத் தேர்தல் மட்டும் நடந்தால் உங்களுக்குச் சாதகமான அனுதாப அலை

னெறியொன்று இந்தியாவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச கடமை பயணத்தை மேற்கொள்ளும் போது அமைச்சர்கள் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பிரதம அமைச்

## அலுவலகங்களுக்குப் பொருட்களை எடுத்துவர

### கொழும்பில் ஒகே, ஆனால் வவுனியாவிலோ...

கூட்டுப்படைத் தலைமையகத்தால் அனுமதிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்குக் கூட வவுனியா தலைமை முகாம் இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்துவருகின்றனராம்.

வடபகுதியைச் சேர்ந்த பல அரச நிறுவனங்களின் செயற்பாட்டுக்குத் தேவையான பொருட்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமும், கூட்டுப்படைத் தலைமையகத்திடமும் அனுமதி பெறப்பட்ட போதும் அப்பொருட்கள் வவுனியாவில் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகின்றனவாம்.

அண்மையில் கூட யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்ட சில பொருட்கள் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளன. (70)

## பாரிஸ் பொலிஸ் அதிபர்கள் கூட்டத்தில்

## 'இன்டர்போல்' பிரதிநிதியாக சுந்தர்

பாரிஸில் நடந்த சர்வதேச பொலிஸ் அதிபர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தில் இலங்கையின் டி. ஐ. ஜியாக முன்னர் கடமையாற்றியவரும் தற்போது இன்டர்போல் பொலிஸ் சேவையில் பணிபுரிபவருமான ஆர். சுந்தரலிங்கம் 'சர்வதேச குற்றவியலும், பொருளாதார பாதிப்புக்களும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

ரஷ்யா உட்பட முப்பது நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

வளைகுடா யுத்தத்தால் மத்தியகிழக்கு நாடுகளில் மட்டுமல்ல ஏனைய மூன்றாம் உலக நாடுகளில் ஏற்படக்கூடிய பொருளாதார தாக்கம், சர்வதேச கடத்தல், குற்றச் செயல்கள் அதிகரிப்பு பற்றிய பல விவரங்களை புள்ளி விவரங்களுடன் முன்வைத்து சுந்தரலிங்கம் பேசினார்.

இவரது உரையின் முடிவில் குழுமியிருந்த அதிகாரிகள் பலரும் எழுந்து நின்று கரகோஷம் செய்து பாராட்டுத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுந்தரலிங்கம், தமிழர் என்ற காரணத்தினால் பொலிஸ் மா அதிபர் பதவி வழங்கப்படாமல் அவரை விட கனிஷ்ட சிங்கள அதிகாரி ஒருவருக்கு அப்பதவி வழங்கப்பட்டதையடுத்து இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து விலகி இன்டர்போல் பொலிஸ் சேவையில் சில வருடங்களுக்கு முன்னர் இணைந்து கொண்டமை தெரிந்ததே.

## 'ஒக்ஸ்பாம்' உதவி

பூநகரியில் கரியாலை-நாகபடுவான் திட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு இனிதொச்சி 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் விவசாய உதவிகளை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் 400 ஏக்கரில் 400 விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. ஒக்ஸ்பாம் நிறுவன நிவாரண அதிகாரி எஸ். ரி. பத்மநாதன் இத்தகவலைத் தெரிவித்தார். (ப-6)

கலைப்பால் ஏற்படக்கூடிய கலவரங்களை ஒடுக்கலாம்!

★ கல்கி: நீங்கள் கேட்டபோது கொடுக்காததற்கு ஏதாவது காரணம் சொன்னார்களா?

கலைஞர்: இல்லை அப்படிக் கொடுத்திருந்தால் சட்டம் — ஒழுங்கு கெட்டு விட்டதென்றெல்லாம் இப்போது ஆட்சிக் கலைப்புக்குக் கற்பனையான காரணங்களைக் கூடக் கூற முடியாதே! அதோடு கடல் பாதுகாப்பு முழுமையும் மத்திய அரசின் பொறுப்பைச் சேர்ந்தது. கள்ளக் கடத்தல் போன்றவற்றை வெல்லாம் பிடித்துக் கொடுக்க வேண்டியதும் அவர்கள் பொறுப்புத்தான்! அப்படித்தான் இப்போதைய கடற்படைத் தளபதி ராம்தாஸ் முன்பு நூறு பேரைப் பிடித்துக் கொடுத்ததாகவும் நாங்கள் விட்டு விட்டதாகவும் சொன்னார். அவர்களில் ஐம்பத்தாறு பேர்

செய்திருக்கிறார்களென்று நினைக்கிறேன்.

★ கல்கி: சட்டமன்றத் தேர்தல் மட்டும் நடந்தால் உங்களுக்குச் சாதகமாக அனுதாப அலை ஏதாவது இருக்குமென்று கருதுகிறீர்களா?

கலைஞர்: அனுதாப அலை இருக்கிறதோ இல்லையோ ஜனநாயகக்கடமையைச் செய்தே ஆக வேண்டும். ஆளுங்கட்சியானால் வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மைகள் செய்வோம். எதிர்க்கட்சியானால், 'சட்டசபை செத்து விட்டது' என்று சட்டசபைக்குப் போகாமல் இருக்க மாட்டோம், சட்டசபைக்குப் போய், தினமும் கலாட்டா செய்து கொண்டிருக்க மாட்டோம். எங்களுக்குக் கருத்துக்களைப் பேசத் தெரியும் என்பதால் எப்படியானாலும் எங்கள் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருப்போம்.

## கருப்பநீர் விற்பனைக்குத் தயார்

யாழ் குடாநாட்டில் தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் பனம் கருப்பநீர் விற்பனை நிலையங்களை பல இடங்களிலும் திறந்து வருகின்றன.

இக்கருப்ப நீரில் மருத்துவ ரீதியான பூரண போஷாக்கு நிறைந்துள்ளதால் அனைவரும் அதனைப் பயன்படுத்தி பயனடைய வேண்டுமென யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

## முத்தமிழ் விழா கொண்டாட்டம்: தீவுப்பகுதியும் தயாராகிறது

தீவுப்பகுதியில் சித்திரை மாதம் 8-ம், 9-ம், திகதிகளில் முத்தமிழ் விழா சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளன.

இவ் விழாவை வெட்டுப் பண்ணை தாம்போதியடியில் இருந்து விழாக் கொண்டாடப் பட விருக்கும் புங்குடுதீவு வரையும் உள்ள வீதிகளின் இருமருங்குகளும் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

இவ் விழாவைக் காணவரும் மக்களுக்கு பாதுகாப்பு, சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒவ்வொரு துறைகளுக்கும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முதலுதவி சேவைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (19)

★ ஆணைக்குழு முன்பு முப்படைத் தளபதிகள் சாட்சியம்

# இஸ்ரேலிடம் விசைப்படகுகளை தவிர கடற்படை உபகரணங்களை வாங்கவில்லை

கொழும்பில் நடைபெறும் மொசாட் விசாரணைக்குழுவில் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் ஆயுதப்படை அதிகாரிகள் சாட்சியமளித்தனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க தமது சாட்சியத்தில்; "1985 ஆம் 1986 ஆம் ஆண்டுகளில் இஸ்ரேலிலிருந்து இராணுவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அதிகாரிகள் அங்குபோய் அவற்றை வாங்கினர் இதற்கான நிதி வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து கிடைத்தது" என்றார்.

கடற்படைத் தளபதி இல்வா பெர்னாண்டோ தமது சாட்சியத்தில் கூறியதாவது; "1985 ஏப்ரலில் கடற்படை அதிகாரிகள் குழுவொன்று இஸ்ரேலுக்கு சென்றது. அங்கிருந்து விசைப் பீரங்கிப்படகுகளை (Dvora) வாங்குவது குறித்து ஆராயப்பட்டது. அதன்படி 12 படகுகள் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் கடற்படை உபகரணங்கள் எதுவும் அங்கு வாங்கவில்லை விசைப் படகு உபகரணங்களே வாங்கப்பட்டன.

தீவிரவாதிகளும் இஸ்ரேலில் பயிற்சி பெறுவது பற்றி பத்திரிகைகளில் படித்திருக்கிறேன்" என்றார்.

அடுத்து சாட்சியமளித்த விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனா கூறுகையில்; "இரு விமானப்படை அதிகாரிகள் இஸ்ரேலில் பயிற்சி பெற்றனர். தீவிரவாதிகள் அங்கு பயிற்சி பெற்றது பற்றி எனக்குத் தெரியாது" என்றார். பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ற் பெரேரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது; "இஸ்ரேலில் பயிற்சி பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் விவரப்பட்டியல் என்னிடத்தில் உள்ளன. மெய்ப்பாதுகாப்பு, தீவிரவாதிகளின் அதிரடித் தாக்குதலை முறியடிப்பது, குண்டு வெடிப்பில் இருந்து தப்புவது குறித்து அங்கே பயிற்சி அளிக்கப்பட்டது" என்றார்.

அதிரடிப் படைத் தளபதி ஆர். எம். கருணசில்வா சாட்சியமளிக்கையில்; 1988 க்குப் பின்னர் பதினொரு அதிரடிப்படை அதிகாரிகள் இஸ்ரேலில் பயிற்சி பெற்றனர். அங்கிருந்து சில உபகரணங்களும் வாங்கினோம் என்றார்.

தேசிய புலனாய்வுப்பகுதி பிரதி பொலிஸ்மா அதிபர் ஷேர்லி விஜயசூரிய சாட்சியமளிக்கையில்; "ரவி ஜெயவர்த்தனாவுடன் நான் இஸ்ரேல் சென்றிருந்தேன். தீவிரவாதிகளுக்கு இஸ்ரேல் ஆயுதம் வழங்கியதாக நான் அறியவில்லை. அவர்கள் அங்கு பயிற்சி பெற்றதாகவும் நான் அறியவில்லை" என்றார்.

விசாரணை தொடர்கிறது. (66)

## முல்லை வைத்தியசாலை செயலற்ற நிலையில்

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலை கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக செயலற்ற நிலையில் இருந்து வருகிறது.

முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கை ஆரம்பமான நாள் முதல் இவ் வைத்தியசாலை மூடப்பட்டுக் கிடக்கிறது. இவ் வைத்தியசாலையில் இருந்துவந்த பல படுக்கை விரிப்புக்கள், மருந்துகள் எக்ஸ்ரே கருவிகள் போன்ற பல இலட்சம் பொறுமதியான பொருள்கள், மருந்துகள் சேதமுற்று நாசமாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (38)

## நிவாரண விண்ணப்பங்களை கிராமசேவகர் வழங்குவதில்லை

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இறந்தோர் உடலவயங்களை இழந்தோர் காயமுற்றோர் ஆகியோருக்கு நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தல்களை சில கிராம சேவையாளர்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் சரிவரப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதில்லை.

இதனால் படித்தவர்கள் உட்பட பாமரமக்கள் வரை பலர் யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கு அலைந்து திரிகின்றார்கள்.

பாதிப்படைந்த பலர் தமது விண்ணப்பங்களை எங்கே சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரியாதுள்ளனர்.

கிராமசேவையாளர்கள் மட்டத்தில் இவ்வாறு பாதிப்படைந்த மக்களுக்குவேண்டிய ஆலோசனைகள் வழங்கப்பட்டால் மக்கள் இவ்வாறு அலைந்துதிரிய வேண்டிய அவசியம் இருக்காது என செயலக வட்டாரங்களில் கருத்து தெரிவிக்கப்பட்டது. (66)

## உள்ளூராட்சி தேர்தலில் பல தமிழர்கள் போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் அதிகமாகத் தென்பகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

குறிப்பாக மலையகத்தில் ஐ. தே. க. கட்சி இ. தொ. கா. என்பன சார்பில் பல தமிழர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

கொழும்பு மாநகர சபையிலும் இ. தொ. கா. - ஐ. தே. க. கூட்டாகப் போட்டியிடுவதும் குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம் இடை நிறுத்தம்

யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உதவிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிலருக்கு அண்மையில் வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் சிலருக்கு இடமாற்ற உத்தரவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. (33)

## ஹிரோயின் கடத்தல் வழக்கு 50 ஆயிரம் ரூபா பிணை

ஹிரோயின் கடத்திய ஐந்து இளைஞர்கள் மீதான வழக்கில் சந்தேக நபர்களை ஐம்பதினாயிரம் ரூபா காசுப் பிணையில் செல்லுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரீ. சுந்தரலிங்கம் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் படகில் இதனைக் கடத்திவந்தபோது கடற்படையால் கைப்பற்றப்பட்டதாக போதைவஸ்து தடுப்பு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் சட்டத்தரணி ஏ. விநாயகமூர்த்தியின் அனுசரணையுடன் ஆஜரானார். (66)

## மகாபொல கொடுப்பனவு வடபகுதிக்கு கிடைக்க கோரிக்கை

யாழ் குடாநாட்டில்நிலவிய அசாதாரண சூழ்நிலையாலே குருநாகலில் இடம் பெற்ற மகாபொல கொடுப்பனவுக்கான வைபத்தில் பல்கலை மாணவர்கள் கலந்து கொள்ள முடியாது போயுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் G P. விஜயதாசவுக்கு யாழ் அரசாங்க அதிபரும், பல்கலைக்கழக துணைவேந்தரும் கடிதம் எழுதியுள்ளனர்.

இந்நிலைமையினால் வடபகுதியில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாப்பொல புலமைப் பரிசில்களை வழங்கும் படி கேட்டுள்ளனர். (ப 11)

## மலையக பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் நியமனம்

மலை நாட்டில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக க. பொ. த சாதாரணதர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் பாடங்களைத் தவிர்ந்த ஏனைய பாடங்களில் சிறப்பான சித்தி பெற்ற மலையக இளைஞர் யுவதிகள் ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

மலையகத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சுமார் நாலாயிரம்முதல் ஐயாயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் பலவருடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## ஜப்பான் வங்கிக் கிளை இலங்கையில் திறக்க முயற்சி

இலங்கையில் ஜப்பான் வங்கிக்கிளை யொன்றைத்திறக்குமாறு வர்த்தகவாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் இங்கு வந்துள்ள ஜப்பானிய தூதுக்குழுவிடம் கேட்டுள்ளார்.

1970 ஆம் ஆண்டு இந்த வங்கிக்கிளையொன்றை கொழும்பில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அன்றைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கவின் சோசலிஸ கொள்கையால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

இலங்கை - ஜப்பான் இருதரப்பு வர்த்தகம் மேலும் விருத்தியடைய வங்கிக்கிளை அவசியம் என்றும் தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (38)

## குவைத்திலிருந்து வந்தவர்களுக்கு 2 கோடி ரூபா நஷ்டஈடு

குவைத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொடுக்க தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குவைத்தில் இருந்து வெளியேறிய ஆசியப்பிரஜைகளுக்காக நஷ்டஈடு வழங்கவென சர்வதேச தொழில் ஸ்தாபனத்தால் ஏற்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்து இதனைப் பெற்றுத் தருமாறு தொழில் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி 76000 இலங்கையர்களுக்கு 2 கோடி ரூபா நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. (12)

## வெளிவாரி பரீட்சைகள் வட, கிழக்கில் இல்லை

பேராதனைப் பல்கலைக்கழகவெளிவாரிப் பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இடம்பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் 1991 ஏப்பிரல் 20 ஆம்திகதிவளவில் வெளிவாரிப்பரீட்சை கொழும்பிலும் பேராதனையிலும் நடைபெறும். வடபகுதியில் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். (ப 11)

## கற்பிட்டி கடலோரத்தில் மசகுஎண்ணெய்ஊற்றுகண்டுபிடிப்பு

கற்பிட்டி கடலோரத்தில் மசகு எண்ணெய் ஊற்றுஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி ஒல்லாந்தர் குடாவுக்கு அருகில் தலைவில்லுவுக்கும்—தொண்டக் குடாவுக்கும் இடையேயுள்ள கடற்கரையிலேயே இந்த மசகு எண்ணெய் ஊற்று உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல் விஞ்ஞானிகள் கொழும்பிலிருந்து கற்பிட்டிக்கு விரைந்துள்ளனர்.

## குருத்துவ விழா

அருட்திரு. யோசப்பு அ. கருணாகரன் அடிகளாரின் 50 வது வருடகுருத்துவதங்க யூபிலி விழா நன்றிப் பலி யாழ் ஆயர் அதி வந் வ.

தந்தை...

இருவரும் கூட்டாக மலர் அஞ்சலி செலுத்திய போது வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்த்தனர்.

23 இராணுவ...

களை பருத்தித்துறைக்கு கொண்டு சென்றன. பிற்பகல்

இதனைக் கடத்திவந்தபோது கடற்படையால் கைப்பற்றப்

## 23 இராணுவ...

களை பருத்தித்துறைக்கு கொண்டு சென்றன. பிற்பகல் 2-30 மணியளவில் சடலங்கள் பருத்தித்துறையில் 'பாச்' மூலம் கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (70)

## தந்தை...

இருவரும் கூட்டாக மலர் அஞ்சலி செலுத்திய போது வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்த்தனர்.

## பூவரசம்...

சாளம்பன் குளம் பகுதிக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (71)

# அறிவித்தல்

## அரிசி ஆலை குத்தகைக்கு நடாத்துதல்

மேற்படி சங்கம் எமது சங்க எல்லைப் பரப்பினுள் ஓர் அரிசி ஆலை குத்தகைக்கு எடுத்து நடாத்த தீர்மானித்துள்ளது: குத்தகைக்கு வழங்க விரும்புவோர் அரிசி ஆலையின் அமைவிடம், அதன் கொள்ளளவு, இயந்திர சக்தி தளபாட உபகரணங்கள், கூறுவிலை என்பவற்றின் விபரத்தை பொது முகாமையாளர் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி'' என்ற முகவரிக்கு 12.04 91 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்,

பொது முகாமையாளர்
சாவகச்சேரி பல நோக்கு கூ. சங்கம்
சாவகச்சேரி.

04008

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 03 -04 -1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மகாபொல கொடுப்பனவுக்கான வைபத்தில் பல்கலை மாணவர்கள் கலந்து கொள்ள முடியாது போயுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் G P. விஜயதாசவுக்கு யாழ்

## மனைவி...

திரும்பாததால் அவரது மனைவி தற்கொலை செய்து கொண்டார்.

புத்தளம் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

## 1994-ல்...

ஏற்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன, நாட்டில் நான்கு சதவிதத்தினர் பாலியல் தொடர்பான வியாதிகளைக் கொண்டுள்ளனர்.

இதனால் இலங்கையில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அறுபதாயிரம் பெண்களில் 20 சத வீதத்தினர் இப்பிணி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைக் கூடங்களில் உள்ள ஆயிரத்துநானூறு பெண்கள் இந்த நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

எயிட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகளாக மாற 5 அல்லது 10 வருடங்கள் பிடிப்பதால் இக்காலப் பகுதியில் பலருக்கு பரவ வாய்ப்புண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமையினால் வட பகுதியில் உள்ள பல்கலைக் கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில்களை வழங்கும் படி கேட்டுள்ளனர். (ப 11)

## பெர்னாட்...

இந்திய வெளியுறவு அமைச்சின் செயலர் முசுகுந்துடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

பேச்சுகளின்போது இலங்கை - இந்திய கூட்டுக் கமிட்டியின் கூட்டம் நடாத்தும் திகதி முடிவெடுக்கப்படும். விஞ்ஞானம், தொழில் நுட்ப கூட்டுக் குறித்தும் ஆராயப் படவுள்ளது. (66)

## மண்ணெண்ணெய்...

விற்பனை செய்கிறார்களா அல்லது இங்கு மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டது பற்றி அறிவிக்காமல் இருக்கிறார்களா என்பது பற்றி எதுவும் தெரியாதுள்ளது என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று கொக்குவில், குளப்பிட்டி, திருநெல்வேலி. கல்வியங்காடு மற்றும் பல இடங்களிலும் ஒருவருக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிக்கப் பட்டதனை அவதானிக்க முடிந்தது. (66)

வுக்கு அருகில் தலைவில்லுவுக்கும்—தொண்டைக் குடாவுக்கும் இடையேயுள்ள கடற்கரையிலேயே இந்த மசகு எண்ணெய் ஊற்று உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து ஆய்வுகளை

## ஹோட்டல்களில்...

இதேசமயம் சில குடிவகைகள் கலப்படம் செய்து விற்கப்படுவதாகவும் பொலிஸாருக்கு பல புகார்கள் கிடைத்துள்ளன. (66)

## முத்தமிழ்—

கும் விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் துரிதகெதியில் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாவில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் கலந்து கொள்ள விருகின்றார்கள்.

## ஆயுதப்படையினரால்.

அர்த்தமில்லை.

ஐக்கிய தேசியக்கட்சியை தோல்வியுறச் செய்து ஜனநாயகம் பிழைக்க வழிசெய்வோம். 16 வருடங்களுக்கு தனவந்தர்கள் மட்டும் வாழவும் இளைஞர்கள் செத்து மடியவும் நாம் அனுமதிக்கக் கூடாது.

மலையக மக்களுக்கு வாக்குரிமை கிடைத்துள்ளது ஆனால் வீடு. நிலம், வாழும் உரிமை இல்லை என்று கூறினார். (33)

## குருத்துவ விழா

அருட் திரு. யோசப்பு ஆ. கருணாகரன் அடிகளாரின் 50 வது வருடகுருத்துவதங்க யூபிலி விழா நன்றிப் பலி யாழ் ஆயர் அதி வந் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

1941 ஆம் ஆண்டு றோமில் குருவாக அபிஷேகம் செய்யப் பட்ட இவர் நான்கு கல்லூரிகளின் அதிபராகவும் பணியாற்றியுள்ளார், அடிகளார் பல நூல்களை எழுதியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது 36

## தமிழோசை...

தற்பொழுது வாரத்தில் திங்கள் முதல் — சனி வரை தமிழோசை இரவு 9.15 மணி முதல் 9.45 மணி வரை சிற்றலை 49. 41 அலைவரிசைகளில் ஒலிபரப்பாகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் தற்காலிக ஒலிபரப்பு இரவு 9.30 மணிக்கு இடம்பெறுகிறது.

பெரும்பாலான இலங்கை, இந்திய நேயர்களின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பெயர்ப்—

கும் ஒக்ஸ்பாம் நிறுவனம் கிளிநொச்சிப் பகுதியில் மக்கள் நன்மைகருதி சகல உதவிகளும் அளித்துவருகின்றது. (ப-6)